# காலசுரபி

2010/2011 இதழ்~05



வரலாற்றுக்கழகம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.
2011

# காலசுரபி

## இதழ் - 5
## 2010-2011

இதழாசிரியர்கள்

செல்வி டிவ்னா பேக்மன்ஸ்

செல்வி பானுஶ்ரீ ஶ்ரீஸ்கந்தராஜா

ஆசிரிய ஆலோசகர்

கலாநிதி கந்தையா அருந்தவராஜா

வரலாற்றுக்கழகம்

வரலாற்றுத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்

இலங்கை

2011

# இலங்கையில் ஒல்லாந்தரின் பொருளாதாரக் கொள்கைகளும் பொருளாதார விருத்தியும்

**திருமதி. சாந்தினி அருளானந்தம்**

**சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தைக் கொண்டிருப்பதனாலும், இயற்கையான விளைபொருட்களுக்குப் பெயர் பெற்றிருந்ததனாலும், கடல் போக்குவரத்துக்குச் சாதகமான இயற்கை, மற்றும் செயற்கைத் துறைமுகங்கள் காணப்படுவதனாலும் பண்டைக்காலம் தொட்டு இலங்கை பிரதான நாடாக விளங்கியதைப் பல்வேறு சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன. 16ஆம் நூற்றாண்டிலிருந்து போத்துக்கேயர் முதலான ஐரோப்பியர் கீழைத்தேசத்தின் வாசனைத் திரவியங்களைப் பெறுவதற்காகவும், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதன் பொருட்டும் இலங்கையைத் தம் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர். கீழைத்தேச வர்த்தகத்தில் இலங்கையின் கேந்திரத்தையும், அதன் வளங்களையும் தமது வர்த்தக முன்னோடி ஒருவரின் குறிப்புக்களில் இருந்து அறிந்து கொண்டனர். 1658 முதல் 1796வரை இலங்கையை ஒல்லாந்தர் ஆதிக்கத்திற்குட்படுத்தி, பல்வேறு பொருளாதாரக் கொள்கைளை நடைமுறைப்படுத்தி, பொருளாதார ஈட்டத்தினைப் பெற்றுக்கொண்டமையைப் பல்வேறு சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன. இவர்களுடைய நோக்கில் வர்த்தகமே பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. அந்த வகையில் கீழைத்தேசத்தில் முதன் முதலாக வர்த்தகத்தை முன்னுரிமைப்படுத்தி ஆட்சியை வலுப்படுத்தியவர்களாக ஒல்லாந்தரைக் குறிப்பிடலாம். 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் கப்பலோட்டுவதிலும் வர்த்தகத் துறையிலும் 18ஆம் நூற்றாண்டுகளில் கப்பலோட்டுவதிலும் வர்த்தகத் துறையிலும் இவர்களே முதன்மை பெற்றிருந்தனர். இலங்கையை நிர்வகித்த தேசாதிபதிகளின் குறிப்புக்களும் இலங்கையில் ஆட்சிசெய்த காலத்தில் பேணப்பட்ட வரவுசெலவு அறிக்கைகளும் ஒல்லாந்தரின் பொருளாதாரக் கொள்கையினைச் சிறப்பாக விளங்க வைக்கின்றன. இவர்களுக்கு முன்னரேயே 16ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயரின் வழிமுறைகளைப் பின்பற்றி அவற்றிலுள்ள குறைபாடுகளை இயன்றவரை நீக்கியும், புகுத்தியும் புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தியும் தம் பொருளாதார அபிலாசையைப் பூர்த்தி செய்ய ஒல்லாந்தர் முயற்சி செய்தனர்.

## பொருளாதாரக் கொள்கையின் தோற்றத்திற்கான பின்னணி

தீவுக் கூட்டங்களைக்கொண்ட கீழைத் தேயக் கடற்பரப்பில் ஒல்லாந்தரின் வர்த்தக மேலாண்மையின் தந்தையாக Jan Pieterszcoen கருதப்படுகின்றார். முதன் முறையாக வர்த்தகச் சட்டகத்தினுள் கால ணித்துவக் கருத்துக்களை இவரே ஊடு ருவச் செய்தார். ஐரோப்பாவின் நிகரற்ற வாசனைப் பொருட்களின் தேவையை நிறை வேற்றுவதற்கு இத்தகைய கொள்கை அவசியமாக இருந்தது. நன்னம்பிக்கை முனையிலிருந்து ஜப்பான் வரை பல்வேறு பொருட்களுடன் வர்த்தகத்தை நடத்திய ஆசியர்களைப் புறந்தள்ளி அவ்வர்த்தகத் தைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வருவதில் அதிக அக்கறை காட்டினர். முதன் முதலாக இத்தகைய நோக்கினை டச்சுக் கிழக்கிந்தியக்கம்பனி (V.O.C) என்ற நிறுவனத்தின் தலைமையின் கீழ் மேற் கொண்டமை ஒல்லாந்தரின்தனிச் சிறப்பென லாம்.

ஒல்லாந்த வர்த்தகக் கம்பனி யின் பிரதான நோக்கம் மிகக் குறைவான செலவில் மிகக்கூடிய இலாபம் பெறுவதே ஆகும். வர்த்தகக் குழுவின் தாய்நாட்டு செயலாளர் பத்தேவியாவிலிருந்த அதிகாரி களுடன் அடிக்கடி தொடர்புகொண்டு இல ங்கை அதிகாரிகளுக்கு அனுப்பிய கட்ட ளைகளிலெல்லாம் வீணான செலவுகளைத் தவிர்த்து திறமையான நிர்வாக முறையின் மூலமாக மிகக்கூடிய இலாபங்களைப் பெறு வதற்கான வழிகளைக் கையாள வேண்டு மென வற்புறுத்தினர். இலங்கையில் அதி காரம் பெற்றிருந்த தேசாதிபதிகளின் ஆட்சியின் திறமை, அவர் தம்காலத்தில் வர்த்தகக் கம்பனிக்குத் திரட்டி அளிக்கும் இலாபத்தின் அடிப்படையிலேயே மதிப்பிட ப்பட்டது. இது இலங்கையிலிருந்த ஒல்லா ந்தத் தேசாதிபதிகளைப் பொறுத்தவரை இலகுவான காரியமாக இருக்கவில்லை. ஏனெனில் வர்த்தகக் கம்பனியின் செயற் குழுவினர் இலங்கையில் மிகக்கூடிய இலா பத்தைத் தரக்கூடிய மிக முக்கிய வர்த்த கப் பொருளான கறுவாவில் இருந்து பெற்றுக்கொள்ளும் இலாபங்களை இலங்கை வரவு செலவுத்திட்டத்திற் சேர்த்துக் கொள் ளாது முற்றாகவே தாய் நாட்டிற்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும், அந்த வருமானத் தைத் தவிர்த்து மிகுதி வருமானங்களிலி ருந்தே நாட்டின் நிர்வாகத்திற்கான செல வை மேற்கொண்டு எஞ்சியதை இலாபமா கக் காணவேண்டுமென்றும் கட்டளையிட்டு இருந்தனர். ஆனால் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தோடு செய்துகொண்ட ஒப்பந்த த்தின் பிரகாரம் தம்மை ஏமாற்றிக் கைப் பற்றிய பிரதேசங்களை திருப்பியளிக்காது தங்கள் ஆதிக்கத்துக்குட்படுத்தியதால் கரை யோரப் பிரதேசத்தின் மிக இலாபம் பொரு ந்திய பிரதேசங்கள் எல்லாம் தீக்கிரையா க்கப்பட்டன. இதனால் அங்கு வாழ்ந்த மக் கள் கிராமத்தை விட்டு ஓடினர். அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்கள், இயற்கை அனர்த்த ங்கள், சுதேச, மற்றும் போர்த்துக்கேயருட னான போர்கள், கலகங்கள் போன்ற வற்றால் ஒல்லாந்தர் எதிர்பார்த்த பொரு ளாதார வளம் பெருமளவு பாதிக்கப்பட்டது எனலாம்.

## நிலவரிக் கொள்கை.

ஒல்லாந்தர் இலங்கையில் நிலவரி வருமானம் தொடர்பாகப்பின்பற்றிய கொள்கை முக்கியமானதாகும். கறுவா வர்த்தக இலா பம் முன்னர் குறிப்பிட்டது போன்று இலங் கையில் அவர்களது நிர்வாகச் செலவின ங்களுக்குப் பயன்படுத்துவதற்கு ஒல்லாந்த அரசினால் அனுமதிக்கப்படாமையால் இலங் கையின் ஒல்லாந்த நிர்வாகிகள் பிற வரு மான மூலங்களில் இருந்தே அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இதன் பொருட்டு நிலவரி வருமானத்தைப் பயன் படுத்த இலங்கையின் கம்பனியாட்சி முற்ப ட்டது. சிங்கள ஆட்சியாளர் நடைமுறைப் படுத்தியிருந்த நிலவரிப்பதிவை அடிப்ப டையாகக் கொண்டு போர்த்துக்கேயரால் செய்யப்பட்ட நிலப்பதிவினை சில மாற்றங் களோடு ஒல்லாந்த நிர்வாகிகள் நடைமு றைப்படுத்த விரும்பினர். போர்களால் சில

ஆவணங்கள் அழிவுற்ற போதும் கொழும்பு மாவட்டத்துக்குரிய ஆவணங்கள் சில Heer, Van Tol போன்ற டச்சு அதிகாரி களாற் பாதுகாக்கப்பட்டன. தேசாதி பதிகள் பெரும் இடையூறுகளுக்கிடையில் பெரு முயற்சி எடுத்து, சிங்களப் பிரதேசத்தில் காணப்பட்ட நிலவரி முறைகள் பற்றிய தகவல்களைத் திட்டவட்டமாக எழுதினார். இந்த நிலவரிமுறையிலிருந்து தாம் பெற வேண்டிய எல்லா வருமானங்களையும் திட்ட வட்டமாகத் திரட்ட நடவடிக்கை எடுத்தனர். மேலும் இம்முறைகளால் இலங்கையின் பிர தேசங்களில் தம்மாதிக்கத்தை வலுப்படுத் துவதையும் பிறிதொரு நோக்க மாகக் கொண்டிருந்தனர். இவ்வகையில் யாழ்ப்பா ணத்தில் நிலம் பற்றிய விபரங்கள் முதன் முதலில் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்த க்கது. இங்கு 1674இல் நிலப்பதிவுக்காக முயற்சி நடைபெற்றாலும் மக்களின் எதிர்ப்பு போன்ற பல காரணங்களால் 1677 இலேயே யாழ்ப்பாணத்தின் நான்கு பிரிவுகளில் மட்டும் சாத்தியமானமை குறிப்பிடத்தக்கது. மிகவும் நீண்ட முயற்சிகளைத் தொடர்ந்து பிற இடங்கள் சிலவற்றிலும் நிலப்பதிவு மேற் கொள்ளப்பட்டது. இப்பதிவுகளின் பின்ன ணியில் நிலவரியும், அந்நிலங்களில் பெறும் பயன்களில் இருந்தும் ஒல்லாந்தர் வரிக ளை வருமானமாக ஈட்டினர். ஆயினும் சில காலங்களில் நிதானமற்ற முறையில் அறியாமையால் மரபு வழக்கிற்கு முரணான முறையில் மக்களிடமிருந்து வரிகளையும் சேவைகளையும் திரட்ட முற்பட்டதினால் கிளர்ச்சிகள் மக்களிடையே ஏற்பட்டன.

இலங்கையிற் காணப்பட்ட நிலவரி வருமானமுறை பற்றி ஒல்லாந்தர் போதி யளவு அறியாமல் இருந்தனர். இதற்கு முன் சிங்கள மன்னர்கள் மற்றும் சுதேச மன்னர் நாட்டின் நிலவரி அமைப்புமுறை அடிப்ப டையில் பெற்ற வருமானத்தை ஒல்லாந் தரால் பெறமுடியவில்லை. அப் பிரதேச இறைமையைப் பெற்றுக்கொள்ள அப்பிர தேச நிலவரி முறையை அறிந்திருக்க வேண்டும். சுதேச நிர்வாக ஊழியர் உதவி யின்றி ஒல்லாந்தர்களால் இதனை சீக்கிர மாக அறிந்திருக்க முடியாது. அவர்கள் வருகையின் முன் கத்தோலிக்க மதத்தை ஏற்றிருந்த சுதேச நிர்வாகிகள் ஒல்லாந்தர் அதிகாரம் பெற்ற பின்பும் போர்த்துக் கேயருக்கே விசுவாசமுள்ளவர்களாக விளங் கியதால் ஒல்லாந்தர் நிலவரிமுறையை அறியமுடியாதிருந்தனர். வேறு சிலர் கண்டி மன்னனுக்கு விசுவாசமுள்ளவராக இருந் தனர். யாழ்ப்பாண நிலவரி முறையில் சிங்களப் பிரதேச நிலவரிமுறை கூடியளவு சிக்கலாக இருந்தது. இவை ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் முழுவதும், தேசாதிபதிகள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும் ஒல்லாந்தர் கால இலங்கையில் வரவு செலவுத்திட்ட த்தில் முக்கிய வருமானமாக நிலவரி முறையால் பெற்ற வருமானம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வர்த்தகமும் தனியுரிமைக் கொள்கையும்.

இலங்கையில் ஒல்லாந்தர் நிலவரியால் பெற்ற வருமானம் பிரதானமாக இருந்த போதும் அவ்வருமானம் அவர்களின் நிர்வா கத்திற்குப் போதுமானதாக இருக்கவில்லை. இந்நாட்டின் வர்த்தகத்தினால் அதனைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளிலும் ஒல்லாந்தர் ஈடுபட்டனர். இலங்கையின் வர்த் தகம் முழுவதையும் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதன் மூலம் சர்வதேச வர்த்தக ஆதிக்கத்தில் மேலாண்மையை நிலைநாட்டுவது இவர்களது பிரதான நோக்கமாகும். இத்தகைய நோக்கினை அடைவதற்குப் பயன்படுத்திய கொள்கை களில் தனியுரிமைக் கொள்கை முக்கியமா னதாகும். இக்கொள்கை வாயிலாகக் கீழைத் தேய வர்த்தகத்தில் ஏகபோகத்தை அனு பவித்தனர்.

இலங்கையின் முக்கியமான வர்த் தகப் பொருட்களைத் தாமே விற்பனை செய்வதற்குத் தனியுரிமைக் கொள்கையைப் பயன்படுத்தினர். ஒன்றன்பின் ஒன்றாகத்

தமக்கு வருமானத்தை அதிகளவில் ஈட்டித் தரும் வர்த்தக மூலங்களைத் தம் கட்டுப் பாட்டின் கீழ்க் கொண்டுவந்தனர். கறுவா, பாக்கு, யானை, முத்து, சங்கு வர்த்தகம் தனியுரிமையாக்கப்பட்டன. 1672இல் புடவை வர்த்தகம் தனியுரிமையாக்கப்பட்ட பொரு ளாகியது. இலங்கையின் வர்த்தகப் பொருட் களில் ஏகபோக உரிமைகளை ஒல்லாந்தர் பெற்றுக்கொண்டதால் அப் பொருட்களினால் பெறும்வருமானமும் முக்கிய வருமானமாக விளங்கியது. சில பொருட்களைத் தனியுரி மையாக்குவதில் சிக்கல்கள் காணப்பட்டன. இப்பொருட்களை விற்பதற்குத் தனியார் அனுமதிக்கப்படவில்லை. சங்கு வர்த்தக தனியுரிமை முழுமையாக வெற்றியளிக் கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் சில துறைமுகங்களைப் பயன்படுத் துவதிலும் ஒல்லாந்தர் தடைகளை ஏற் படுத்தினர். சில துறைமுகங்களைப் பயன் படுத்தும் கப்பல்கள் அதற்குரிய அனு மதியை ஒல்லாந்தரிடம் இருந்து பெற்றிருக் கவேண்டும். மேலே குறிப்பிட்ட பொருட்கள் சிலவற்றில் தமது பொருளாதாரக் கொள் கைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தினார் கள் என்பதை விளங்கிக்கொள்ள அப்பொருட் களின் மீதான அவர்களின் கட்டுப்பாடுக ளையும், அவற்றைப் பெறுவதற்கான நடவடி க்கைகளையும் அவதானிக்க வேண்டியது அவசியமானதாகும்.

## கறுவா

கீழைத்தேச நாடுகளில் இலங்கை யைப் பொறுத்தவரை இவ்வாசனைத் திரவியங்களில் கறுவா மிக முக்கியமான தாகக் காணப்பட்டது. இலங்கைக் கறுவா வின் தரமும் பெறுமதியும் ஐரோப்பிய நாடு களில் அதன் கேள்வியை அதிகரித்தது. இலங்கையில் இத்தகைய கறுவா இயற் கையாகவே விளைந்தது. எனவே கறுவா விளையும் பிரதேசங்களையும் அதன் விநி யோக வழிவகைகளையும் தமது கட்டுப்பா ட்டில் வைத்திருக்கும் நோக்கில் அரசியல், நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். ஆயினும் இக் கறுவாப்பட்டைகளைச் சேகரிப் பதில் பிரச்சனைகள் காணப்பட்டன. இத்த கைய பிரச்சனைகளைத் தீர்த்து இலகு வாகக் கறுவாவை சேகரிப்பதற்கு ஏற்கன வே இலங்கையில் கறுவா சேகரித்த சாலி யாஸ் இனத்தவரை முழுமையாகப் பயன் படுத்தினர். இவ் இனத்தவரைக் கட்டாய கறு வா சேகரிப்பைச் செய்யுமாறு நிர்ப்பந்தித் தனர். இதனைக் கவனிப்பதற்கு தனியான நிர்வாகமும் ஏற்படுத்தப்பட்டதுமன்றி மக்கள் இவற்றை ஒழுங்காகச் செய்ய ஒருவித கணக்கு முறையையும் அவர்கள் பயன் படுத்தினர். கறுவா விற்பனையைத் தாமே கையாள முற்பட்டமையால் வேறு எவரும் அதனை விற்காது தடைசெய்தனர்.

கறுவாவை ஒல்லாந்தர் பெறக்கூடி யதாகக் காணப்பட்ட போதும் கண்டியரச னுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே நில விய பகைமை இவர்களின் கறுவா,மற்றும் ஏனைய பொருட்களின் வர்த்தகத்திற்கு சிறிது இடையூறு விளைவித்தது எனலாம். போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட் டைகளையும், துறைமுகங்களையும் 1638 இல் கண்டியரசனுடன் செய்துகொண்ட ஒப்பந் தத்திற்கு மாறாக அவற்றைத் தாமே வைத் திருந்தனர். இதனால் ஏற்பட்ட பகைமை யினால் கண்டியரசன் தனது அரசைச் சுற்றி யுள்ள பிரதேசங்களிற் காணப்பட்ட விளை பொருட்களை எரித்து அழிப்பதில் கவனம் செலுத்தினான். இதைத்தடுக்க ஒல்லாந்தர் சில காலங்களில் மன்னனைச் சமாதானப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்ட னர். மன்னனுக்கு சில காலங்களில் வருடா வருடம் இருதரம் நன்கொடைகளோடு தூது அனுப்பி வந்ததோடு, தமது பொருளாதாரக் கொள்கையிலும் சிறிது தளர்வைக் காட்டி னர். குறிப்பாக சில துறைமுகங்களைக் கண்டி மன்னனுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களையே தமது ஆதிக்கத்திற்குள் உட்படுத்தியிருந்தனர். இப் பிரதேசங்களில் காணப்படும் விளை பொருட்களின் வர்த்தகத்தில் ஏகபோக

உரிமையை அனுபவிக்கவும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒல்லாந்தர் துறை முகங்களை அரண்செய்தனர். பெரும்பாலும் துறைமுகங்களை அண்டி வர்த்தகத்தின் பொருட்டும், பாதுகாப்பின் பொருட்டும் கோட் டைகளை ஒல்லாந்தர் பலப்படுத்தினர். கண்டிப் பிரதேசத்திலுள்ள பொருட்களும், ஒல்லாந்தப் பிரதேசங்களிலிருந்து கொள் ளையடிக்கப்பட்ட, அல்லது ஒல்லாந்தருக்கு தெரியாமல் இரகசியமாக வர்த்தகம் செய் யப்படும் பொருட்களும் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கண்டி அரசருக்குச் சொந்தமான துறைமுகங்கள் மூலம் வர்த் தகம் செய்வதற்கு வசதியுடையனவாகக் காணப்பட்டன. ஆகவே இத் துறைமுகங்க ளைத் தமது ஆதிக்கத்துக்குட்படுத்தி இலங் கையிலிருந்து வெளியே செய்யப்படும் வர்த் தகம் அனைத்தையும் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தனர்.

### யானை

ஒல்லாந்தரின் இலங்கைப் பொரு ளாதாரத்தில் அடுத்ததாக யானை வியா பாரமே முக்கியமானதாக இருந்தது. 18ஆம் நூற்றாண்டில் ஒவ்வொரு வருடமும் சராசரி யாக 100,000 Guilders வருமானம் கிடை த்தது. ஆனால் பிடிபடும் யானைகளின் எண்ணிக்கை மாறுபட்டமையால் அதன் வருமானத்திலும் ஏற்ற இறக்கம் காணப்பட் டது. யானைகளைப் பிடித்துக் கொடுப்பவர் கள் ஒவ்வொரு வருடமும் குறிக்கப்பட்ட யானைகளைப் பிடித்தளிக்க வேண்டியிருந் தது. வன்னியரசர்கள் திறையாக யானை களைக் கொடுத்தனர். கொழும்பு, மாத்தறை போன்ற இடங்களில் பெறப்பட்ட யானைக ளையும் யாழ்ப்பாணத் திற்குக்கொண்டு வந்து,அதன் பின்னர் ஊர்காவற்றுறை துறைமுகமூடாக இந்தியாவுக்குக் குறிப் பாக வங்காளத்திற்கு ஏற்றுமதி செய்து அதிக இலாபத்தைப் பெற்றனர். மேலதி கமான இலங்கை வரவு செலவுத்திட்டத்தில் 20 – 25% இலாபவருமானம் இதன் மூலம் பெறப்பட்டது. இவ் வர்த்தகத்தைத் தனியுரி மையாக்கிக் கொண்ட ஒல்லாந்தர் யானை பிடிப்பதற்கு குறிப்பிட்ட இனத்தவரைப் பயன்படுத்தினர். யானைகளை கரையோர மாக கண்டி இராச்சியத்தைக் கடந்து கொண்டுவருவதற்கு ஒல்லாந்தரின் அனு மதியைப் பெற்றிருக்க வேண்டும். மேலும் இவ்வர்த்தகத்தில் தரகு முறை காணப்பட் டமையும் அது தொடர்பான சட்டங்கள் நடை முறைப்படுத்தியமையும் ஒல்லாந்தரின் வர்த் தக தனியுரிமையின் பாற்பட்டனவாகக் காணப்பட்டன.

### பாக்கு

தனியுரிமையை நிலைநாட்ட முற்பட்ட இலங்கையின் வர்த்தக மூலங்களில் பாக் கும் முக்கியத்துவம் பெறுகின்றது. 1670 இல் தனியுரிமையாக் கப்பட்டாலும் அதனை முழுமையாக நிலைநாட்ட முடியவில்லை. 1697இல் தனிப்பட்ட வர்த்தகர்களும் பாக்குச் சேகரிக்க அனுமதிக்கப்பட்டனர். இவ் வர்த் தகர்கள் சேகரிக்கும் பாக்கின் அளவுக் கேற்ப பணம் செலுத்த வேண்டியிருந்ததோடு, அவற்றை ஒல்லாந்தருக்கே விற்கக் கடமை ப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. தென் னிந்தியக் கடற் கரையில் பாக்கின் விலை மிக அதிகமாக இருந்தமையால் பாக்கின் மீதான தனியுரிமை ஒல்லாந்தருக்கு அதிக வருமானத்தை ஈட்டிக்கொடுத்தது.

### இந்திய - இலங்கை வர்த்தகத் தைக் கட்டுப்படுத்தல்

போத்துக்கேயர் கீழைத்தேசத்தைக் கைப்பற்றும் வரையில் முஸ்லிம்கள் வர்த்த கத்தில் முதன்மை பெற்றிருந்தனர்.சிறப்பாக இந்திய இலங்கை வர்த்தகத்தில் இவர் களின் பங்கு அதிகமாகும். ஆயினும் போத் துக்கேயர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத் திலும் இந்திய இலங்கை வர்த்தகத்தில் முஸ்லிம்களின் செல்வாக்கினை முழுமை யாக அகற்ற முடியவில்லை. கண்டி அரசு டனும் முஸ்லிம் வியாபாரிகள் வர்த்தகம் நடத்தி வந்தனர். இதனைத்தடுக்க ஒல்லாந்தர்

பல நடவடிக்கைகளை எடுத்தனர். கண்டியரசின் எல்லைப் புறப் பாதைகளைத் கட்டுப் படுத்தி, வர்த்தக உரிமைகளை தம் வசமாக்கினர். இந்தியாவில் சோழமண்டலக்கரை, மலபார், வங்காளம் முதலான இடங்களைச் சேர்ந்த முஸ்லிம், இந்து வியாபாரிகளும், கரையோரப் பிரதேச சுதேச மக்களும் வர்த்தக நடவடிக்கைகளில் பரம்பரையாக ஈடுபட்டு வந்தனர். 1670களில் இவர்களின் சுதந்திர வர்த்தகத்திற்குத் van Goens தேசாதிபதி தடைவிதித்தார். இந்த வர்த்தகத்தை ஒல்லாந்தரே தனிப்பட்ட முறையில் நடாத்தத் தலைப்பட்டனர்.

இத்தகைய இந்துசமுத்திர வியாபாரத்தால் பெரும் இலாபம் பெறமுடிந்தது. ஆயினும் வர்த்தகத்தில் முஸ்லிம்களை முற்றாகப் புறக்கணிக்க முடியவில்லை என்பதே உண்மை. ஏனெனில் முஸ்லிம் வர்த்தகர்களும் ஒல்லாந்தர் வர்த்தகத்தில் பங்கேற்றனர். குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு யானைகளை விற்பதில் இவர்கள் பங்காளர்களாக இருந்தனர். மேலும் முஸ்லிம் வியாபாரிகள் மாத்தறை, காலி ஆகிய இடங்களில் சில வரிச்சலுகைகளைப் பெற்றனர். அந்நடவடிக்கை ஒல்லாந்தரின் பொருளாதாரக் கொள்கையில் முக்கியமான மாற்றம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை இந்திய வர்த்தகத்தின் செழிப்பினை ஒல்லாந்தர் அவதானித்தாலும் உடனடியாக அதில் தலையிடும் வாய்ப்பு இருக்கவில்லை. 1658 இல் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்திய பின்பு கரையோரத் துறைமுகங்களைக் கட்டுப்படுத்துவதும் கடற்பரப்பில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதும் அவசியமாக இருந்தமையால் இருநாட்டு வர்த்தகத்தில் தலையிட வேண்டியிருந்தது. இதன் பின்னணியில் யானை வர்த்தகத்தைத் தாமே நடத்த முற்பட்டனர். ஆனால் யானை வர்த்தகத்துக்கு ஏற்ற வகையில் அவர்களது கப்பல் வசதியானதாக இருக்கவில்லை. அத்துடன் ஏற்றுமதி செய்யப்பட்ட யானைகளிற் பல இறந்தன. மேலும் இந்திய வர்த்தகர் களுக்குப் பதிலாக ஐரோப்பியரை இந்திய இலங்கை வர்த்தகத்தில் ஈடுபடுத்தும் முயற்சியும் உரிய பலனை அளிக்கவில்லை. இதனால் அவ் வர்த்தகத்தில் இந்திய வர்த்தகர்களே தொடர்ந்தும் ஈடுபட முடிந்தது. ஆயினும் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் யானைகளுக்காக வங்காள அரசன் ஒல்லாந்தருக்கு முற்பணம் கொடுக்க வேண்டும். இருநாட்டு வியாபாரிகளும் தமக்கு அருகிலிருந்த ஒல்லாந்தர் தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட பணத்தைச் செலுத்தி சிட்டை பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு இந்திய இலங்கை வர்த்தகத்தில் தாம் நேரடியாக ஈடுபடுவதை விட இந்திய வர்த்தகர்களை அதிகமாக ஈடுபடுத்தி அவர்களின் மூலம் இலாபம் ஈட்டுவதை தமது நோக்காகக் கடைப் பிடித்தனர்.

இலங்கை இந்திய வர்த்தகமானது ஒல்லாந்தர் தமது பிரதான கொள்கையான 'குறைந்த செலவில் கூடுதலான இலாபம் ஈட்டுதல்' என்ற இலக்கினை அடைவதற்கு பெருந்துணைபுரிந்ததெனலாம். பொதுவாக இவ்வர்த்தகம் இருபக்க வர்த்தகமாகவே நடைபெற்றது. அதாவது இவ்வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் கப்பல்கள், மரக்கலங்கள் இந்தியாவிலிருந்து சில பொருட்களைக் கொண்டு வரும் அதேவேளை இலங்கையிலிருந்து சில பொருட்களைக் கொண்டு செல்லும். உதாரணமாக யானைகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் அரிசியோடு இங்கு வந்தடையும். அத்துடன் வங்காளத்தின் அரிசி இந்தியாவின் மேற்குக்கரையிலுள்ள கனாரா(canara) என்ற இடத்திலிருந்து பெறப்படும் அரிசியைவிட விலை குறை வாகவும் காணப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இத்தகைய இருபக்க வர்த்தகத் தால் ஒல்லாந்தர் குறிப்பிடத்தக்களவு இலாபமீட்டினர்.

வர்த்தகத்தில் தனியுரிமையை இறுக்கமாக நிலைநாட்டியமை தனிப்பட்ட வர்த்தகத்திற்கு இடையூறாக அமைந்து கொண்

டது. இக்கொள்கையை இலங்கையில் நிலை நாட்டுவதில் பெரும் பங்கு வகித்தவர்கள் Van Goens, Maetsuyker போன்ற தேசாதிப திகள் ஆவர். இவர்களுக்குப் பின் இலங் கையை நிர்வகித்த Laurence Pyl வர்த்தக தனியுரிமையால் நாட்டின் தனிப்பட்ட வர்த் தகம் கொல்லப்படுவதாகக் குறிப்பிட்டுள் ளமை கவனத்திற்குரியதாகும். இவர் சுதந் திர வர்த்தகத்திற்கு ஆதரவளித்தமை குறிப் பிடத்தக்கது.

## விவசாயத்தில் ஒல்லாந்தர் கடைப் பிடித்த கொள்கைகள்

விவசாயத்துறையில் ஒல்லாந்தர் தன்னிறைவடையும் கொள்கையை இலங் கையிற் கடைப்பிடித்தனர். அதாவது முக்கி யமாக இலங்கையின் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் நிலையை அடைய பெரும் முயற்சிகளை எடுத்தார்கள். ஒல்லாந்த நிர்வாக ஊழியர், சேனைப்படைகள்,மற்றும் நிர்வாகத்தின் பங்கு பெற்ற சுதேச ஊழி யர்களுக்குத் தேவையான தானியத்தையும் தம் பிரதேச மக்களுக்குத் தேவையான தானியத்தையும் பெருமளவுக்கு வெளிநாட் டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியி ருந்தது. வேறு வழிகளாற் தாம் பெறும் வருமானங்களை வெளிநாட்டிலிருந்து தானி யம் இறக்குமதி செய்வதில் அவர்கள் செலவிட விரும்பவில்லை. எனவே ஏற்றுமதி யைக் கூட்டி இறக்குமதியைக் குறைக்க முயன்றனர். ஏற்றுமதியால் கூடிய இலாபம் அடையக்கூடுமென அவர்கள் உணர்ந்தி ருந்தனர். ஆனால் இறக்குமதியைக் குறைப் பதற்கு அவர்கள் இறக்குமதியாகும் பொரு ட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும். ஒல்லாந்தர் காலத்தில் நெல், சீனி, சீவல் ஆகிய பொருட்கள் முக்கிய மான இறக்குமதிப் பொருட்களாகக் காணப் பட்டன. இதனால் இலங்கை நிதியில் பெரும்பகுதி வெளியேறியது. ஆகவே இறக் குமதியைக் குறைக்க அவர்கள் இப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முயற்சிசெய்தனர்.

## நெற்பயிர்ச் செய்கை விருத்தி

இலங்கையின் பெரும் பகுதிகளை நெல்லுற்பத்திக்குப் பயன்படுத்தும் கொள் கையின் பின்னணியில் பயிரிடப்படாத நிலங்களையும், சதுப்பு நிலங்களையும் உப்பு நீர்ப் பிரதேசங்களையும் விளைச்சல் நிலங் களாக மாற்றுவதன் மூலம் தன்னிறைவை அடைய முற்பட்டனர். முத்துராஜவெல, நாவற்குழி போன்றன இவ்வடிப்படையில் பயிர் விளையும் நிலங்களாக மாற்றப்பட் டன. இதனைவிட இந்நிலங்களைக் குத்த கைக்கு அளித்தும், படையினருக்கு நிலங் களை வழங்கியும் தானியத்தை விளை விக்க ஊக்கமளித்தனர். இக்கொள்கையின் காரணமாகப் பூரணமாகவே தங்களின் தானியத் தேவையைப் பூர்த்தி செய்ய முடி யாது இருந்தபோதும், Van Goens போன்ற தேசாதிபதிகள் இதில் பெரும் ஊக்கமெடு த்து வர்த்தகக் கம்பனிகளின் செலவைக் குறைக்கப் பெரும்பாடுபட்டனர்.

இலங்கையில் நெல்லுற்பத்தியைப் பொறுத்த வரையில் இலங்கையின் ஆதி காலச் செல்வங்களான குளங்களும், கால் வாய்களும் அழிந்து காணப்பட்டன. முன் னைய இராசதானி காலங்களைப் போல விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக நீர்ப்பா சன வசதிகளை அமைக்கும் பணிகளில் ஒல்லாந்தர் கவனஞ் செலுத்தினர். பல கால்வாய்களைத்திருத்தியும், புதிதாகக் கட் டியும் உதவினர். வளவகங்கை ஆற்றுக்குப் பக்கத்தில் உள்ள குளங்களைத் திருத்தி, கால்வாய்கள் அமைத்து நீர்ப்பாசன வசதி களை மக்களுக்குச் செய்து கொடுப்பதன் மூலம் விவசாய விருத்திக்கு உதவிசெய்ய முயன்றனர். இவை விவசாயத்துக்கு மட்டு மன்றி வர்த்தக வளர்ச்சிக்கும் வாய்ப்பாக விளங்கியமை சிறப்பான அம்சமாகும். நாட் டின் தேவைக்கு நெல் உற்பத்தி செய்ததை விட வியாபாரப் பொருட்களை உற்பத்தி

செய்வதில் ஒல்லாந்தர் பெரும் கவனமெடுத்தனர். இயற்கையாகக் காட்டில் வளர்ந்த கறுவாவை விட பெருந்தோட்டங்களிலும் புதிதாக கறுவாவைப் பயிரிட முற்பட்டனர். கோப்பி முதலிய வர்த்தகப் பொருட்களை உற்பத்தி செய்ய முயன்றனராயினும் அவர்கள் அதில் போதிய வெற்றி பெறவில்லை என்றே கூறவேண்டும். இவ்வாறு இலங்கையின் வர்த்தகப் பொருட்களைப் பயிரிடுவதில் ஒல்லாந்தர் ஒழுங்கான முறைகளைக் கடைப்பிடித்து தமது வருமானத்தை அதிகரிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டனர். ஏலம், மிளகு போன்றவற்றை விளைவிப்பதிலும் சில கொள்கைகளை வகுத்துச் செயற்பட்டனர்.

பருத்தி, பட்டு, போன்றவற்றை விளைவிக்கவும் பரிசோதனை நடாத்தினர். வன்னிப் பகுதிகளில் பருத்தி உற்பத்தி செய்வதற்கான வசதிகளைச் செய்தனர். இங்கு உற்பத்தியாகும் பருத்திகளைக் கொண்டு புத்தளத்தில் தாம் நிறுவிய ஒரு நெசவுத் தொழிற்சாலை மூலம் நெசவு உற்பத்தியைப் பெருக்க முயன்றனர். புகையிலை, சாயவேர் பயிரிடுவதிலும் அக்கறை காட்டினர். யாழ்ப்பாணத்தின் பிரதான காசுப் பயிராக புகையிலை விளங்கியது. இவற்றின் விற்பனையாலும், வரி அறவீட்டினாலும் பெரு நன்மைகளை ஒல்லாந்தர் அடையக் கூடியதாக இருந்தது. இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

கைத்தொழிலிற் சில விருத்திகளை மேற்கொள்வதன் வாயிலாகக் ஒல்லாந்தக் கம்பனி வருமானத்தை ஈட்டியது. புடவை வியாபார முக்கியத்துவத்தை அறிந்து நெசவுத் தொழிலையும், சாயமிடும் தொழிலையும், சிற்சிலசாதி, மற்றும் வகுப்பினரிடையே ஊக்கமளிக்க முயன்றனர். நெசவுத்தொழில் செய்வோரை தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்து அத் தொழில்களை விருத்தி செய்தனர். யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் உற்பத்தியான சாயவேருக்கு அதிக செல்வாக்கிருந்தது. அதிலும் சிவப்புச் சாயத்திற்கு கூடுதலான மதிப்பிருந்தது. இவற்றிலெல்லாம் வெற்றியடைவதற்காக தாய்நாட்டின் செயற்குழு மட்டுமன்றி பத்தேவியா அதிகாரிகளும், இலங்கையின் ஒல்லாந்த நிர்வாகிகளும் அவ்வப்போது கட்டளைகளை விடுத்ததோடு, சில சட்டங்களையும் நடைமுறைப்படுத்தினர்.

## இராஜகாரிய முறையும் அடிமைகளும்

குறைந்த செலவில் கூடுதலான இலாபமீட்டும் கொள்கைக்கு இலங்கையில் சாதகமாக இருந்த இரு அம்சங்களாக இராஜகாரியமுறையும், அடிமைகளும் காணப்பட்டமை பிரதான அம்ச்மாகும். இராஜகாரியம் என்பது சுதேச நடைமுறைகளில் ஒன்றாகும். அதாவது இலவசமாக அரசனுக்குச் சில பணிகளை மேற்கொள்வதாகும். இம்முறையை ஒல்லாந்தர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். கட்டாயமாக ஒருவர் மாதத்தில் குறிப்பிட்ட நாட்களில் பொதுப் பணிகளைச் செய்தல் வேண்டும். இதே வேளை அடிமைகளிற் பலர் தென்னிந்தியாவிலிருந்து ஒல்லாந்தரால் கொண்டு வரப்பட்டு சில தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் கல்லுடைத்தல் கோட்டை கட்டுதல், நீர்ப்பாசனப்பணிகளை மேற்கொள்ளுதல், வீதிகள் அமைத்தல், வயல்களில் வேலை செய்தல் போன்றவற்றைச் செய்தனர். குறிப்பாக அடிமைகளைக் காலியாகக் கிடந்த வளமிக்க இப்பிரதேசங்களில் குடியேற்றி தானியத்தை விளைவிக்க ஏற்பாடு செய்தனர். அடிமைகள் மற்றும் இராஜகாரியம் செய்வோர் கம்பனிக்கு அளப்பெரிய சேமிப்பை வழங்கினர் எனில் மிகையில்லை.

எதற்கெல்லாம் வரிவிதிக்க முடியுமோ அவற்றிற்கெல்லாம் வரி விதித்தனர். தலைவரி, தொழில்வரி , உப்புவரி, செருப்புவரி, நிலவரி, மரவரி, சுங்கவரி, ஆயவரி எனப் பல்வேறு வரிகளை பெற்றனர். இவையும் ஒல்லாந்த டச்சுக் கம்பனியின் பிரதான

வருமான மூலங்களாக இருந்ததை அவதானிக்கலாம்.

நீதி நிர்வாகத்தை சிவில் அதிகாரத்திலிருந்து வேறுபடுத்தி ஒல்லாந்துக் கம்பனி ஊழியர்களின் தனிப்பொறுப்பில் விட்டதன் மூலம், நேரடியாகவும், திறமையாகவும் இலங்கையின் வருமானத்தைப் பெற்றதோடு ஒவ்வொரு துறையையும் திறமையாக மேற்பார்வை செய்யமுடிந்தது. அத்துடன் தமது கொள்கைகளை இயன்றளவு செயற்படுத்தக் கூடியதாக இருந்தது. அடிக்கடி அவர்கள் நடத்திய விசாரணைகள் மூலம் நேர்மையற்ற ஊழியர் பதவி நீக்கப்பட்டனர். ஆகையால் அவர்களின் பொருளாதாரக் கொள்கையின் சித்திக்குச் சிறந்த நேர்மையான நிர்வாகமுறை முக்கியமாக இருந்தது எனலாம்.

## முடிவுரை

ஒல்லாந்தரின் இலங்கை மீதான பொருளாதாரக் கொள்கைகளை நோக்கும் போது குறைந்த செலவில் கூடுதலான வருமானத்தைப் பெறுவது என்ற கொள்கையே அடிப்படையாக இருந்ததெனக் கூறலாம். இந்நோக்கினை அடையும் பொருட்டே பிற பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொண்டனர். இலங்கையின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்த தேசாதிபதிகள் இக்கொள்கையை செயற்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டியவர்களாக இருந்தனர். Van Goens போன்ற தேசாதிபதிகள் ஒல்லாந்தரின் பொருளாதாரக் கொள்கைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தினர். Gpllenesse போன்ற சில தேசாதிபதிகள் சில தளர்வுகளை வழங்கினர். குறிப்பாக சுதந்திர வர்த்தகத்திற்கு முன்னுரிமை அளித்தனர். மேலும் டெனிஷ், பிரான்ஸிய, பிரித்தானிய வர்த்தக நடவடிக்கைகள் இலங்கையில் செல்வாக்குப்பெற முற்பட்ட போதும் சில தளர்வுகள் கம்பனியால் ஏற்படுத்தப்பட்டது. பொதுவாகத் தேவை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் ஒல்லாந்தரின் பிரதான கொள்கைக்குப் பங்கமேற்படாத வகையில் பிற பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அத்தோடு ஒல்லாந்தரின் எல்லாக் கொள்கைகளும் வெற்றியளித்தன வெனக் கூறுவதற்கில்லை. ஆயினும் ஒல்லாந்தரின் பொருளாதார நடவடிக்கைகள் இலங்கை வரலாற்றில் சிறப்பாக சில விளைவுகளை ஏற்படுத்தின என்பதை இலகுவில் மறுக்க முடியாது.

## உசாத்துணை நூல்கள்.

1. Arasaratnam . S, *Dutch Power in Ceylon 1658 -1687*, Navaraing, New Delhi.
2. Arasaratnam.S, *Memoirof Julius Stein Van Gollenesse.*Govener of ceylon 1743 – 1753, Pepartment of National Arcchives, Colombo.
3. Silva K.M.De (Editer),*History of Srilanka*, Oxford University Press Delhi.
4. சிவசாமி.வி "இலங்கையிலே போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை ஓர் ஒப்பியல் நோக்கு", *பொருளியலாளன்,* மலர்2, இதழ்3 இளம் பொருளியலாளன் மன்ற வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1998.

"வரலாறு என்பது
புகழப்படும்போது
வானில்
எழுவதுமில்லை
இகழப்படும்போது
மண்ணில்
வீழ்வதுமில்லை"